IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No.**141/2018 **Date**: 01.08.2023

**PW**-1- சின்னம்மாள்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனக்கு தற்போது வயது 72. எனக்கு 15 வயதில் திருமணம் ஆனது. என்னை நாகிசெட்டிபட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். திருமணம் ஆனது முதல் நான் என் கணவருடன் நாகிசெட்டிபட்டியில் தான் வசித்து வருகிறேன். என் கணவருடன் பிறந்தவர்கள் அவருடன் சேர்த்து 2 பேர்கள். அவர்களுக்குள் பாக பிரிவினை ஆகிவிட்டது. என் அப்பா சொத்தில் பாகம் வேண்டும் என்று இத்தாவாவை தாக்கல் செய்துள்ளேன். என் அப்பாவிற்கு பூர்வீக சொத்தும், சுய சம்பாத்திய சொத்தும் இருந்தது. அதில் எது சுயாஜ்ஜீய சொத்து என்றும் எது பூர்வீகம் என்றும் தெரியாது. நான் சுயாஜ்ஜீய சொத்தை வழக்கில் குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தில் 5ம் பிரதிவாதிக்கு பாகம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கும் ராமசாமிக்கும் சரிபாதி பாத்தியம் என்றால் சரிதான். என் அப்பா இறந்த வருடம் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் 11.09.1991ல் இறந்ததாக சொல்லி இருந்தால் அது தவறு. என் அப்பா இறந்து 27 வருடம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. அதன் பிறகு நான் என் அப்பா சொத்தை பாகம் பிரத்து கொடுக்கும் படி யாரையும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் பிரித்து கொடுத்த பாதி பாகத்தில் நான் விவசாயம் செய்துள்ளேன். அதன் சர்வே எண், விஸ்தீரணம் தெரியாது. நான் அந்த நிலத்தை ஓட்டியதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. நான் ஓட்டி வரும் நிலத்தின் ஜக்குபந்தி தெரியாது. நான் எப்போதும் பாகம் பிரித்து கொடுக்கும் படி கேட்கவில்லை என்றாலும், நான் பாதி பாகத்தை ஓட்டி வருவதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. என் அப்பாவும், என் சித்தாப்பாவும் அவர்களுக்குள் வாய்மொழி பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதை அனுசரித்து 1 முதல் 5 பிரதிவாதிகள் 21.01.2009 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை எழுதி கொண்டார்கள் என்றால் தெரியாது. பொன்னாகவுண்டர் பாகத்தில் நான் பாகம் கேட்கவில்லை. ராமசாமி கவுண்டர் பாகத்தில் தான் எனக்கு பங்கு உள்ளது. 21.01.2009 தேதியிட்ட பாக பத்திரத்தில் கண்டுள்ள பொன்னாகவுண்டர் பாகத்திலும் நான் பாகம் கேட்கவில்லை. நான் பூர்வீக சொத்தை தாவாவில் காண்பிக்கவில்லை என்பதாலும், என் அப்பாவின் சுயாஜ்ஜீய சொத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதாலும் தாவா நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என்னுடைய கூட்டு சுவாதீனத்தை காண்பிக்க ஆதாரம் தாக்கல்

செய்யவில்லை எனறார்ல சரியல்ல. தவாா சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா கால வரையரை சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 21.01.2009 பாக பிரிவினை பத்திரம் என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. அது செல்லாது என்று சொல்ல எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதிகளை வீண் தொந்தரவு செய்ய தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதிக்கு பிரிந்த பாக சொத்தை பொறுத்து தாவா நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- சின்னம்மாள்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.